7 மாவட்டங்களில் இன்று மதியம் 12 மணி முதல்

# அரசு பஸ் போக்குவரத்து மீண்டும் தொடங்கியது

## சென்னையில் மெட்ரோ ரெயில்கள் இயங்கின

சென்னை, நவ. 26– நிவர் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 7 மாவட்டங்களில் 24–ந் தேதி மதியம் 1 மணி முதல் அரசு பஸ் சேவை நிறுத்தி வைக்கப்பட்டது.

**மீண்டும் இயக்கம்**

செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 2 நாட்களுக்கு பிறகு இன்று பிற்பகல் 12 மணி முதல் பஸ் சேவை தொடங்கியுள்ளது.

தற்போது புயல் கரையை கடந்துவிட்டதால், இந்த மாவட்டங்களில் வழக்கம் போல் அரசு பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளது.

**மெட்ரோ ரெயில்**

இதேபோல மெட்ரோ ரெயில் சேவையும் நேற்று இரவு 8 மணி வரை இயக்கப்பட்டன. அதன்பின்னர் 2 வழித்தடத்திலும் சேவை நிறுத்தப்பட்டது.

தற்போது இயல்பு நிலை திரும்பியதால், பகல் 12 மணி முதல் மெட்ரோ ரெயில் சேவை விடுமுறை நாள் அட்டவணைப்படி இயக்கப்படுகிறது.

அதாவது பத்து நிமிடத்துக்கு ஒரு ரெயில் வீதம் இயக்கப்படும் என்று மெட்ரோ ரெயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**ஆம்னி பஸ்கள்**

அரசு அறிவித்திருந்த 7 மாவட்டங்களுக்கு ஆம்னி பஸ் சேவை நிறுத்தப்பட்டு இருந்தது. இன்று முதல் அனைத்து மாவட்டங்களுக்கும் முழுமையாக ஆம்னி பஸ்கள் இயக்கப்படும் என்று அனைத்து ஆம்னி பஸ் உரிமையாளர் சங்க தலைவர் அன்பழகன் தெரிவித்தார்.